(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

281—

மூலிகைப் பூங்கா

***34876—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியிலுள்ள சிறுமலை, காந்தமலை மற்றும் அழகர்மலை பகுதிகளில் மூலிகைப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் நத்தம் தொகுதிக்குட்பட்ட சிறுமலை, காந்தமலை மற்றும் அழகர்மலை ஆகிய பகுதிகளில் மூலிகைப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று வினா எழுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதிகளுக்கு தனி மூலிகைப் பூங்கா அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

2018 ஜூலை 9]

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலில் என்றென்றும் மங்காத சூரியன், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், இளம் சூரியன் செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப் பூங்கா அமைப்பது குறித்து, 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்பதன் அடிப்படையில் நமது முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். எனது நத்தம் தொகுதியின் மலைப் பகுதிகளில் இருக்கும் மூலிகைகளால் ஆங்கில மருத்துவத்தில் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து வருகின்றன.

அடுத்த தலைமுறைக்குப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷங்களான ஆதண்டை–வாத நோய்க்கும், விராலி–மூட்டு வலிக்கும், கள்ளி முலையான்–சர்க்கரை நோய்க்கும், பெரு மருந்துக் கொடி–விஷ முறிவிற்கும், கருடன் கிழங்கு–தோல் நோய்க்கும் மருந்தாகப் பயன்படுகின்றன. இதுபோன்ற எண்ணற்ற மூலிகைகள் பாதுகாக்கப்படாமல் உள்ளன. ஆகவே, அரசு எனது தொகுதியிலுள்ள சிறுமலை, காந்தமலை, அழகர்மலை ஆகிய இடங்களில் மூலிகைப் பூங்கா அமைக்க முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மருத்துவச் செடிகள் வாரியத்தால் (National Medicinal Plants Board–NMPB) வழங்கப்பட்டுள்ள மருத்துவச் செடிகள் தொடர்பான திட்டங்கள் செயலாக்க வழிகாட்டு நடைமுறைகளின்படி, மருத்துவத் தாவரங்கள் தொடர்பான திட்டம் தமிழகத்தில் வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் இத்திட்டத்தின்மூலம் சிறுமலை, காந்தமலை, அழகர்மலை ஆகிய காப்புக் காடுகளில் 150–க்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகள் நடவு செய்யப்பட்டு, மூலிகை வனமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் தனியாக மூலிகைப் பூங்கா

அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை முதலில் அவருக்குத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்ட இந்தக் கேள்விக்கும் அதையே என்னுடைய பதிலாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் சிறுமலை சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு, இரண்டு முறை கோடை விழா கொண்டாடப்பட்டது. சமீபத்தில் திண்டுக்கல்லில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறுமலையை சுற்றுலாத் தலமாக அறிவித்தார்கள். திண்டுக்கல் நகரத்திலிருந்து சுமார் 22 கி.மீ. தொலைவில் சிறுமலை உள்ளது. அங்கு நீர்வீழ்ச்சிகளும், பிரசித்தி பெற்ற வெள்ளிமலைக் கோயிலும் உள்ளன. மலைச் சாலையை இருவழிப் பாதையாக மாற்றி, மேற்குத் தொடர்ச்சி மலையின் திட்டத்தில் சேர்த்தும் மற்றும் லிங்காவடி மலையூர், காந்த மலை, பெரிய மலையூர், சின்ன மலையூர், வலசு மற்றும் காந்த மலை கன்னிமார் கோயில் வரை சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிற்கு வனச் சாலை அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நத்தம் சட்டமன்ற உறுப்பினருடைய மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லையென்றாலும்கூட, அவர் கேட்டிருப்பது என்னுடைய மாவட்டமான திண்டுக்கல்லைச் சேர்ந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர், திரு. எடப்பாடியார் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சிறுமலையை சுற்றுலா மையமாக அறிவிப்பதற்குரிய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் நம்முடைய

2018 ஜூலை 9]

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்கள், அதற்கு வேண்டிய பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு அனைத்து விஷயங்களையும் கருத்தில் கொண்டு சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்குரிய சூழ்நிலை உருவாகும்போது அவர் குறிப்பிட்ட கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனுதினமும் வணங்கும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மதுரை மாவட்டம், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் சிறுமலை அருகே மீனாட்சிபுரம் என்ற மலை கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்திற்கு நத்தம் தொகுதி எல்லை வரை சாலை போடப்பட்டுள்ளது. மீனாட்சிபுரம், மதுரை கோட்டத்திற்குட்பட்ட பகுதியாக இருப்பதால், அந்த இடத்திற்கு 2 கிலோ மீட்டர் சாலை அமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதி மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தது என்றாலும், எங்கள் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள நத்தம் தொகுதியை ஒட்டிய பகுதி. அதனுடைய சாலைகள் மற்றும் பிற பிரச்சினைகள் காரணமாக அங்கிருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. பா. நீதிபதி, திரு. பெரியபுள்ளான்*

என்கிற செல்வம் ஆகியோர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் எங்களைப் போன்றவர்களையும் அழைத்து ஒரு விழாவை நடத்தினார்கள். அதற்குச் செல்ல இயலவில்லை. அந்த விழாவின் நோக்கமே சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்துதான். இருந்தாலும், அது குறித்த குறிப்புகளைப் பெற்று வனத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். கும்பாபிஷேகம் நடந்து 33 வருடங்கள் ஆகியிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

282—

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

***7910—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 17 கிளைகள் மற்றும் 473 இணைப்புச் சங்கங்கள் மூலமாக திருப்பூர் மாவட்ட மக்களின் பயிர்க் கடன் மற்றும் இதர கடன் தேவைகள் செவ்வனே நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. திருப்பூர் மாவட்டம் தொழில் துறையில் வளர்ந்து வருவதாலும், மக்கள் தொகை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, மாநகராட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ள நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தலைமையில் மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்கள் அடங்கிய குழு ஒன்று